# 9 சீடர்களின் ஆயர் பணி

**யோவான் :21:1-19**

உயிர்த்த இயேசு சீடர்களைச் சந்தித்தார். அச்சந்திப்பினூடாகப் பேதுரு புதியதொரு பொறுப்பைப் பெற்றுக் கொண்ட முறையைக் கற்றுக்கொண்டு, கிறிஸ்தவ பொறுப்பை நிறைவேற்றுவதற்கான பணியில் ஈடுபடுவதற்காக நாமும் வழி காட்டலைப் பெறுவோம்.

வகுப்பாசிரியர் திடீரென சுகயீனம் காரணமாகப் பாடசாலைக்கு வரவில்லை என அறிவித்தார். எனவே வகுப்புத் தலைவனாகிய குமாருக்கு அன்று வேலை அதிகமாக இருந்தது. ஆசிரியர் மூலமாக அனுப்பப்பட்ட ஒப்படைக் குறிப்புக்களைப் பற்றி அறிவித்து, மாணவர்களை அதில் ஈடுபடுத்தி, வகுப்பின் ஒழுக்கத்தைப் பேணி நடத்திச் செல்லும் பாரிய பொறுப்பாக அமைந்தது. ஒருநாள் முழுவதும் இவ்வாறான பொறுப்பை நிறைவேற்றுவது இலகுவான காரியமல்ல. தன்னால் இயன்ற அளவு நன்றாகக் குமார் அதனை நிறைவேற்றினான்.

குமார் தனது வகுப்பை மிகவும் பொறுப்போடு நடத்திக் கொண்டிருந்த வேளையில், வகுப்பிற்குள் வந்த அதிபர், அவன் செயலைக் கண்டு மகனுக்கு மாணவத் தலைவனாகும் தகுதி நன்றாக இருக்கின்றது. தொடர்ந்தும் இம்மாதிரியான பொறுப்புக்களை நிறைவேற்று ‘‘மிகவும் நல்லது’’ எனக் கூறினார்.

குமாரைப் போன்று தமது பொறுப்புக்களை மிகவும் நல்ல முறையில் நிறைவேற்றும் கெட்டித்தனமான மாணவர்கள் வகுப்பில் இருப்பது போன்று உங்கள் பாடசாலை சமூகத்திலும் இருப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வாறு நீங்களும் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றும் தலைவனாக வரமுடியும்.

‘‘திருத்தூதர்கள்’’ என்னும் இயேசுவின் சீடர் குழுவிலும் இவ்வாறான தலைவர்கள் இருந்தார்கள் என்பதை நாம் பார்ப்போம்.

அவர் யார்? அது சீமோன் என்னும் பெயரைக் கொண்ட பேதுரு அவர் ஒரு முறை

**இயேசுவை ‘‘நீர் கிறிஸ்து’’ எனக் கூறினார்.**

இன்னும் ஒருமுறை இயேசுவோடு கூட

**மரிப்பதற்கும் தயாராய் இருக்கிறேன் எனக் கூறினார்.**

பின்பு ஒரு முறை

**அவரைத் தெரியாது எனக் கூறினார்.**

இருப்பினும் இயேசு அவருக்கு

**''நீ மனம் திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து'' என்று கூறினார். லூக்கா** : 22:32.

இது அவரால் கொடுக்கப்பட்ட பொறுப்பு. இருப்பினும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட வேளையில் பேதுருவும் ஏனைய சீடர்களும் பயந்து மறைந்து இருந்ததை நற்செய்திகள் குறிப்பிடுகின்றன. (யோவான் :20:19)

இவ்வாறு எதிர்பார்ப்பற்ற நிலையில் இருந்த பேதுரு விசேட தீர்மானம் ஒன்றை எடுத்தார். சீடர் குழுவின் தலைவரான இவரின் தீர்மானத்திற்கு ஏனைய அங்கத்தவர்களும் உடன்பட்டனர்.

பேதுரு - நான் மீன் பிடிக்கப் போகிறேன்.

ஏனைய சீடர்கள் - நாங்களும் உம்மோடு வருகிறோம்.

அவர்கள் திபேரியாக் கடலை நோக்கிச் சென்று வழமையாக மீனவத் தொழிலை மேற்கொண்டனர். ஆனால் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. யோவான் :21:2-3.

இங்கு இவர்கள் யாரைச் சந்தித்தனர்? உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்தனர். யோவான் :21:1-4.

இருப்பினும் சீடர்கள் இயேசுவை அறிந்து கொள்ளவில்லை. ஆனால் இயேசு, அவருக்கும் அவருடைய சீடர்களுக்குமிடையில் முன்பு இருந்த தொடர்பை நினைவுபடுத்துவதற்கு செயற்பட்டார்.

அது இவ்வாறு,

இயேசு - நண்பர்களே உங்களிடம் மீன்கள் இருக்கிறதா?

சீடர்கள் - இல்லை என்றனர்.

இயேசு - படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் அப்போது கிடைக்கும் என்றார்.

சீடர்கள் அவரை அறிந்துகொள்வதற்கு உதவியாகவும் அவருக்குக் கீழ்ப்படிவதற் காகவும் அவரோடு இருந்த தொடர்பை நினைவு கூறுவதற்கும் இவ்வாறு செயற் பட்டார். இதன் பிரதிபலனாக அவர்களுடைய முயற்சி நிறைவேறியது. அவர்களுக்கு மிகுதியாய் மீன்கள் கிடைத்தன. அவ்வேளையில் இயேசுவின் அன்புச் சீடன் யோவான் அவரை அறிந்து கொண்டான். அதை பேதுருவிடம் கூறியபோது அதை நம்பிய பேதுரு ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். ஏனைய சீடர்கள் வலையைக் கரைக்குக் கொண்டு வருவதற்கு செயல்பட்டனர்.

இரவு முழுவதும் அவர்களுக்கு மீன்கள் எதுவும் கிடைக்காத போதும், சீடர்கள் இயேசு வுக்குக் கீழ்ப்படிந்து சென்றதினால் பெரியமீன்கள் நூற்று ஐம்பத்து மூன்று பிடிக்கக் அவர்களால் முடிந்தது. வலை நிறைய மிகுதியான மீன்கள் இருந்தபோதும் வலை கிழியவில்லை. உயிர்த்தெழுந்த இயேசு இங்கு சீடர்களுக்கு

- புதிய எதிர்பார்ப்பைக் கொடுத்தார்.
- தைரியத்தைக் கொடுத்தார்
- பெலனைப் பெற்றுக் கொடுத்தார்.
- அவர்களைப் போஷித்தார்.
- புதிய பொறுப்பை நிறைவேற்றுவதற்குப் பேதுருவை ஆயத்தம் செய்தார்.

எதிர்பார்ப்புக் குறைந்து போய், சீடர்கள் சோர்வடைந்த சந்தர்ப்பத்தில் அவர் அவர் களைக் கைவிடாது அவர்களைத் தைரியப்படுத்துவதற்காக இயேசு திபேரியாக் கடல் அருகே வந்தார். எமது வாழ்விலும் நாம் தைரியத்தை இழந்த நிலையில் இருக்கும்போது தைரியத்தோடு முன்னோக்கிச் செல்வதற்கும் எமது எதிர்பார்ப்புக்கள் குறைவடைந்த சந்தர்ப்பத்தில் எதிர்பார்ப்புக்கள் நிறைவடையக் கூடியதாக இயேசுவின் மேல் விசுவா சத்தை கட்டியெழுப்பி அவருக்குக் கீழ்ப்படிந்து முன்னோக்கிச் செல்வதற்கு உயிர்த்த இயேசு எமக்கு வழி காட்டுவார்.

திபேரியாக் கடல் என்னும் கலிலேயாக் கடலருகில் முன்னைய நாட்களில் இயேசு பேதுருவையும் ஏனைய சீடர்களையும் அழைத்து அவர்களைத் தனது மறைத்தூதுப் பணியின் அங்கத்தவர்களாக ஏற்படுத்திய முறையை நினைவிற் கொள்வோம். இங்கு மீண்டும் இயேசு, பேதுருவின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தி புதிய பொறுப்பை ஒப்படைத்த முறையை யோவான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

• u»õÁuõP

இயேசு : யோவானின் மகன் சீமோனே நீ இவர்களைவிட மிகுதியாய் என்மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்புண்டு என உமக்குத் தெரியும்.

இயேசு : என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்.

இயேசு : யோவானின் மகன் சீமோனே என் மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே.

இயேசு : என் ஆடுகளை மேய்.

Cµs hõ® • øÓ

இயேசு : யோவானின் மகன் சீமோனே என்மீது அன்பு செலுத்துகின்றாயா?

பேதுரு : ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே நான் உம்மை அன்பு செய்கிறேன் என்பது உமக்குத் தெரியும்.

இயேசு : என் ஆடுகளைப் பேணிவளர்

மூன்றுமுறை இயேசுவைத் தெரியாது என மறுதலித்த பேதுருவிடம் ஒரே கேள்வியை மும்முறை கேட்டு எதிர்பார்த்தது என்ன?

இந்த செயலினால் பேதுரு துயருற்றார். ஏனைய சீடர்களைவிட மேலாக பேதுருவிடம் மாறாத ஆழமான அன்பைக் கொண்டிருந்தபடியால் அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இயேசு ஒரே கேள்வியை மும்முறை வினாவினார்.
‘‘நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரைக் கொடுப்பார்.’’ (யோவான் 10:11)

இவ்வாறு கூறிய இயேசு தனது ஆயனின் பொறுப்பை பேதுருவிடம் ஒப்படைத்தார் என்பது தெளிவாகின்றது.

மந்தைகளைப் போஷிப்பதற்கும் மந்தைகளின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கும் மிகவும் முக்கியமான பண்பானது மந்தைகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பது. இவ்வாறான அன்பு பேதுருவிடம் உள்ளதா என்பதை அறிந்து பார்த்தார். ஆயனின் கடமையை நிறைவேற்றுவதற்காக இயேசுவைப் போன்று பேதுருவுக்கும் சிலுவையில் மரிக்க நேரிடும் என்பதை இயேசு முன்வைத்தார்.

**இவ்வாறு, இன்றும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும்**

- ♦ தனது மந்தையின் தலைவனாவதற்கு
- ♦ வழிகாட்டி மந்தையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு
- ♦ மந்தையை ஆன்மீக வளர்ச்சிக்கு சரியான முறையில் போஷிப்பதற்கு பொறுப்பையும் அழைப்பையும் இயேசு வெளிப்படுத்துவார்.

பேதுருவின் முன்மாதிரியைப் பின்பற்றி, கிறிஸ்தவ தலைவர்களாக கடவுளுக்காக அர்ப்பணித்து பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அவர் எம்மை அழைக்கின்றார். அதற்காக ஆழமான அன்பை எமது வாழ்விலே விருத்தி செய்து, அவருக்குள் இணைவதற்கு கிறிஸ்தவ மந்தைகளை முன்னோக்கி அழைத்துச் செல்வதை அவர் எம்மிடம் இருந்து எதிர்பார்க்கின்றார்.

இல்லத்தில், பாடசாலையில், சமுதாயத்தில் எம்மிடத்தில் பின்வருவனவற்றை கடவுள் எதிர்பார்க்கின்றார்.

- ♦ இறைவார்த்தையில் பெலனடைந்து பிறரையும் போஷித்து பெலப்படுத்த வேண்டும்.
- ♦ இடைவிடாது ஜெபத்தில் தரித்திருந்து பிறரைப் பெலப்படுத்த வேண்டும்.
- ♦ எப்போதும் கிறிஸ்தவ குணாதிசயங்களை நமது வாழ்வில் முன்மாதிரியாக காண்பிக்க வேண்டும்.

இப் பொறுப்பை அன்போடும், அர்ப்பணத்துடனும் வாழ்ந்து நிறைவேற்ற வேண்டும்.

ö\ ¯Ø£õk

''கிறிஸ்தவர்களின் பொறுப்பு'' என்ற தலைப்பில் சிறு கைநூல் ஒன்றைத் தயாரிக்கவும். கீழே தரப்பட்ட தலைப்பின் கீழ் கருத்துக்களை முன்வையுங்கள்.

- ♦ பேதுருவுக்கு ஆயத்துவப் பணியை ஒப்படைத்தல்
- ♦ கிறிஸ்தவர்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு